# Intercollegiate Meet

**19.02.2025** திண்டுக்கல், எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் கணினி அறிவியல் துறை சார்பாக Tech-Fest-25 பிரம்மாஸ்திரம் என்ற கல்லூரிகளுக்கு இடையேயான Intercollegiate Meet நடைபெற்றது. இந்த நிகழ்வில் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 12 கல்லூரிகள் கலந்து கொண்டனர். இதில் 7 விதமான போட்டிகள் நடைபெற்றன. கல்லூரி முதல்வர் முனைவர்.நாகநந்தினி அவர்கள் தலைமை உரையாற்றி போட்டியினை துவக்கி வைத்தார். கணினி அறிவியல் துறைத்தலைவர் முனைவர் ஜ.இராஜேஸ்வரி அவர்கள் வரவேற்புரையாற்றினார். இந்த நிகழ்வில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் கேடயம் வழங்கப்பட்டது. இதில் அதிக அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு அதிக புள்ளிகள் பெற்ற சிறந்த கல்லூரியாக, PSNA பொறியியல் கல்லூரி தேர்வு செய்யப்பட்டு கோப்பை வழங்கப்பட்டது. இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை கணினி அறிவியல் துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் இணைந்து செய்திருந்தனர்.




